# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 113/பேரூ/2024**
**நாள் : 25.09.2024**

திரு. R. மயில்சாமி,
புதுவிளாங்குடி,
மதுரை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பரவை சிறப்பு நிலை பேரூராட்சி,
மதுரை மாவட்டம். – எதிர் மனுதாரர்

மதுரை – 18, புது விளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் 5 என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. மயில்சாமி, என்பவரின் 09.10.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 10.10.2023 அன்று பெறப்பட்டு, 113/பேரூ/2024 என்ற எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

<u>ஆணை</u>

மதுரை – 18, புது விளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் 5 என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. மயில்சாமி, என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு புகார்களை தெரிவித்துள்ளார் :-

"மதுரை மாவட்டம், வடக்கு தாலுக்கா, பரவை பேரூராட்சி, திண்டுக்கல் மெயின் ரோடு, பவர் ஹவுஸ் எதிரில் உள்ள அதிசயம் தீம்பார்க் பொழுது போக்கு பூங்கா உள்ளது. இங்கு சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரையிலும் பொழுது போக்குவதற்கு அனைத்து நாட்களிலும் உள்ளூர் மாவட்டம், வெளி மாவட்டம் மற்றும் வெளி மாநிலங்களிலும் இருந்தும் வருகிறார்கள். இதற்கு நுழைவு கட்டணமாக பெரியவர்களுக்கு ரூ.700/– மற்றும் சிறியவர்களுக்கு ரூ.500/– வசூலிக்கப்படுகிறது. அதிசயம் தீம் பார்க் நிறுவனத்தினர் 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி சட்டம் (தமிழ்நாடு சட்டம் X/1939) மற்றும் தமிழ்நாடு சிறப்பு சட்டம் 297–ன்படி கேளிக்கை வரி இன்று வரை செலுத்தாமல் இருப்பதினால் பரவை பேரூராட்சிக்கு பல கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது. இதில் கேளிக்கை வரியாக சட்டப்படி 20% முதல் 30% வரை உள்ளாட்சிக்கு செலுத்த வேண்டும்.

மேலும், அதிசயம் தீம் பார்க்கை முழுமையாக தள ஆய்வு செய்யாமல் குறைந்த சொத்துவரி வசூலிக்கப்படுகிறது. ஆனாலும் சுமார் 7 ஆண்டுகளுக்கு மேலாக சொத்துவரி, தொழில்வரி மற்றும் தொழிலாளர் வரி வசூலிக்காமல் மெத்தனமாக செயல்பட்டு, வரி வசூலிக்காததினால் பரவை பேரூராட்சிக்கு பல இலட்சம் ரூபாய் வருவாய் இழப்பீடு ஏற்பட்டு இருக்கிறது.

அதிசயம் தீம்பார்க்கில் உள்ள குளியல் தொட்டிகளை முறையாக சுத்தம் செய்யாமல் இருப்பதினால் கிருமிகள் உள்ளன. இதில் சிறியவர்கள் ஆனந்த குளியல் போடுவதால், தொற்றுக்கு ஆளாகி வருகிறார்கள். இதை சுகாதார ஆய்வாளர்கள் சோதனை செய்யாமல், கண்டும் காணாமல் இருக்கிறார்கள். எனவே, மேற்படி அதிசயம் தீம் பார்க் நிறுவனத்தினர் கேளிக்கை வரி செலுத்தாமலும், சொத்து வரி, தொழில் வரி மற்றும் தொழிலாளர் வரி வசூலிக்காமல் பரவை பேரூராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்திய முன்னாள் செயல் அலுவலர்கள் மற்றும் இன்னாள் செயல் அலுவலர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுத்தும், இழப்பீட்டை சரி செய்ய அவர்களின் ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்து பேரூராட்சியின் கணக்கில் வரவு வைக்க வேண்டியும், அரசுக்கு உரிய வரி செலுத்தாமல் ஏமாற்றி வரும் அதிசயம் தீம் பார்க் மீது நகர் ஊரமைப்பு சட்டம் 1971–ன் படி உரிய நடவடிக்கை எடுத்தும், அங்குள்ள அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டடங்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறும் மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் அவர்களை மிகவும் பணிவன்புடனும், தாழ்மையுடனும் வேண்டிக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 06.08.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் பரவை சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) பரவை சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 19.08.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"மனுதாரரின் புகார் மனு குறித்து விரிவான அறிக்கையினை கீழ்க்கண்டவாறு ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படுகிறது என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1. சொத்து வரி

| வரி விதிப்பு எண். | வருடம் | வரிவிதிக்கப்பட்டவரின் பெயர் | கதவு எண். | தெருவின் பெயர் | வார்டு எண். | முதல் அரையாண்டு கேட்பு (ரூ.) | இரண்டாம் அரையாண்டு கேட்பு (ரூ.) | வசூல் செய்த நாள் | பற்றுச் சீட்டு எண். | வசூல் செய்த தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3286 | 2016–17 | உரிமையாளர் மகாராணி பார்க் | 10.4.27 | மெயின் ரோடு | 12 | 162560 | 162560 | 17.01.2017 | 37270 | 325120 |
| 3286 | 2017–18 | உரிமையாளர் மகாராணி பார்க் | 10.4.27 | மெயின் ரோடு | 12 | 162560 | 162560 | 03.08.2017 | 42373 | 325120 |
| 3286 | 2018–19 | உரிமையாளர் மகாராணி பார்க் | 10.4.27 | மெயின் ரோடு | 12 | 325120 | 325120 | 12.03.2019 | 55862 | 650240 |
| 5499 | 2019–20 | உரிமையாளர் மகாராணி பார்க் | 10.4.27 | மெயின் ரோடு | 12 | 162560 | 162560 | 04.02.2020 | 502096 | 325120 |
| 5499 | 2020–21 | உரிமையாளர் மகாராணி பார்க் | 10.4.27 | மெயின் ரோடு | 12 | 162560 | 162560 | 12.10.2020 | 67743 | 325120 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5499 | 2021–22 | உரிமையாளர் மகாராணி பார்க் | 10.4.27 | மெயின் ரோடு | 12 | 162560 | 162560 | 26.03.2022 | 84253 | 325120 |
| 5499 | 2022–23 | உரிமையாளர் மகாராணி பார்க் | 10.4.27 | மெயின் ரோடு | 12 | 321869 | 321869 | 04.11.2022 | 2022–2023/200298/1/50 | 643738 |
| 5499 | 2023–24 | அதிசயம் தீம் பார்க் | 10.4.27 | மெயின் ரோடு | 12 | 321869 | 321869 | 10.07.2023 | 2023–2024/200298/1/590 | 643738 |
| 5499 | 2024–25 | அதிசயம் தீம் பார்க் | 10.4.27 | மெயின் ரோடு | 12 | 321869 | 321869 | 10.07.2023 | 2024–2025/200298/1/93 | 643738 |

2. தொழில் வரி

| வ. எண் | வரி விதிப்பு எண். | வரிவிதிக்கப்பட்டவரின் பெயர் | வருடம் | தொகை (ரூ.) | வசூல் செய்த நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | 706 | உரிமையாளர் மகாராணி அம்யூஸ்மெண்ட் பார்க் | 2016-2017 | 3920 | 29/12/2016 |
| 2 | 205 | உரிமையாளர் மகாராணி அம்யூஸ்மெண்ட் பார்க் | 2017-2018 | 3920 | 02/02/2018 |
| 3 | 628 | உரிமையாளர் மகாராணி அம்யூஸ்மெண்ட் பார்க் | 2018-2019 | 4500 | 07/02/2019 |
| 4 | 648 | உரிமையாளர் மகாராணி அம்யூஸ்மெண்ட் பார்க் | 2019-2020 | 4500 | 20/01/2020 |
| 5 | 159 | உரிமையாளர் மகாராணி அம்யூஸ்மெண்ட் பார்க் | 2020-2021 | 8000 | 12/10/2020 |
| 6 | 1587 | உரிமையாளர் மகாராணி அம்யூஸ்மெண்ட் பார்க் | 2021-2022 | 8000 | 26/03/2022 |
| 7 | 292 | அதிசயம் தீம் பார்க் | 2023-2024 | 8000 | 04/09/2023 |
| 8 | 1 | அதிசயம் தீம் பார்க் | 2024-2025 | 8000 | 30/04/2024 |
| 9 | 270 | அதிசயம் தீம் பார்க் | 2022-2023 | 8000 | 19/08/2024 |

3. மேலும், மகாராணி அம்யூஸ்மெண்ட் பார்க்காக இருந்த காலத்தில், மதுரை மாவட்டம் வணிகவரித்துறை அலுவலகம் மூலம் கேளிக்கை வரிகள் பேரூராட்சி கணக்கிற்கு ஈடு செய்யப்பட்டு கணக்கில் வரவாக்கப்பட்டுள்ளது. மேலும், அதிசயம் தீம் பார்க் கேளிக்கை வரி மார்ச் **2021** வரை காசோலை மூலமும் வரவு வைக்கப்பட்டுள்ளது. பேரூராட்சி கணக்குகளில் ஈடு செய்யப்பட்டுள்ளது.

4. மேற்படி கேளிக்கை வரிக்கு **4/2021** முதல் **3/2024** வரை உள்ள காலாண்டுகளுக்கு செலுத்த வேண்டிய கேளிக்கை வரியை உடனடியாக செலுத்த **09.08.2024** அன்று அறிவிப்பு நோட்டீஸ் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அதிசயம் தீம் பார்க் நிறுவனத்தால் புதிதாக ஏதும் கட்டடம் கட்டப்படவில்லை. இப்பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏதுமில்லை என்ற விபரத்தையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரரும் மற்றும் பரவை சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரும் 13.09.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 30.08.2024 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. R. மயில்சாமி என்பவர் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ள 09.09.2024 நாளிட்ட மனுவில் தனது குடும்ப விழா நடைபெறவுள்ள காரணத்தினால் மேற்படி 13.09.2024 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு தன்னால் வர இயலாது எனவும், தான் இந்நடுவத்தில், சமர்ப்பித்த 09.10.2023 நாளிட்ட புகார் மனுவின் அடிப்படையிலேயே விசாரணை மேற்கொள்ள வேண்டி கேட்டுக் கொண்டுள்ளார். இதனை தொடர்ந்து இம்முறைமன்ற நடுவத்தில் 13.09.2024 அன்று நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு. R. மயில்சாமி என்பவர் ஆஜராகவில்லை.

6) எதிர்மனுதாரான பரவை சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி. நூ. ஜீலான்பானு என்பவர் 13.09.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :-

“அதிசயம் தீம்பார்க் என்ற நிறுவனமானது மகாராணி அம்யூஸ்மெண்ட் பார்க் என்ற பெயரில் இருந்த காலத்திலிருந்தே கேளிக்கை வரி முறையாக செலுத்தப்பட்டு, அதிசயம் தீம்பார்க் என்ற பெயரில் செயல்படும் நிறுவனத்தால் ஜூன் 2023 வரை கேளிக்கை வரி பேரூராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது. 2022–23–ஆம் ஆண்டிற்கு முதல் காலாண்டு தொகையாக ரூ.17,32,781/– வசூலிக்கப்பட்டுள்ளது.

அதிசயம் தீம்பார்க் நிறுவனத்தால் 2016–17 ஆம் ஆண்டு முதல் 2024–25ஆம் ஆண்டு வரைமொத்தம் ரூ.42,07,062/– செலுத்தப்பட்டுள்ளது. 2022–23–ஆம் ஆண்டில் சொத்து வரியானது முன்கூட்டியே நிறுவனத்தால் செலுத்தப்பட்டதன் அடிப்படையில் ஊக்க தொகையாக ரூபாய். 6,502/– குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

அதிசயம் தீம்பார்க் நிறுவனத்தால் 2016–17 ஆம் ஆண்டு முதல் 2024–25ஆம் ஆண்டு வரை தொழில் வரியாக மொத்தம் ரூ.56,840/– செலுத்தப்பட்டுள்ளது.

எவ்வித புகாருக்கும் இடம் அளிக்காமல் அந்நிறுவனத்தில் குளியல் தொட்டிகளை சுத்தமாக பராமரித்திட உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

அதிசயம் தீம்பார்க் நிறுவனத்தால் புதிதாக எவ்வித கட்டடமும் கட்டப்படவில்லை. நிதியிழப்பு ஏதும் பேரூராட்சிக்கு ஏற்படவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். எனவே,

1. கேளிக்கை வரியானது ஜுன் 2023 முதல் காலாண்டு வரையிலும்.
2. சொத்து வரியானது நடப்பாண்டு 2024–25 வரையிலும்,
3. தொழில் வரியானது நடப்பாண்டு 2024–25 வரையிலும் வசூலிக்கப்பட்டுள்ளது.
4. புகாராக தெரிவிக்கும் குளியல் தொட்டியினை நேரில் தள ஆய்வு செய்யப்பட்டதில், எவ்வித புகாருமின்றி சுத்தமாக நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது.
5. மேற்படி நிறுவனத்தால், புதியதாக அனுமதிக்கு மாறாக கட்டடங்கள் ஏதும் கட்டப்படவில்லை.

எனவே, பேரூராட்சிக்கு நிதி இழப்பு ஏதும் ஏற்படவில்லை என்பதை தெரிவித்து, எனது வாக்குமூலத்தினை ஏற்று, இப்புகார் மனுவினை முடித்து வைக்குமாறு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

7) எதிர்மனுதாரரான பரவை சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் 13.09.2024 அன்று நடைபெற்ற விசாரணையின்போது அதிசயம் தீம்பார்க் நிறுவனத்திடமிருந்து கேளிக்கை வரி வசூலிக்கப்பட்ட விவர அறிக்கையை தனது 13.09.2024 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்து, இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். அதன் விவரம் பின்வருமாறு.

**கேளிக்கை வரி**

மகாராணி அம்யூஸ்மெண்ட் பார்க்காக இருந்த காலத்தில் மதுரை மாவட்டம் வணிகவரித்துறை அலுவலகம் மூலம் கேளிக்கை வரிகள் பேரூராட்சி கணக்கிற்கு ஈடு செய்யப்பட்டு பேரூராட்சி கணக்கில் வரவாக்கப்படுவது நடைமுறையில் இருந்து வந்தது, மேலும், மகாராணி அம்யூஸ்மெண்ட் பார்க் கேளிக்கை வரி மேற்படி, நிறுவனத்தால் மார்ச் 2021 வரை காசோலை மூலம் பெறப்பட்டு பேரூராட்சி கணக்கின் மூலம் வரவு வைக்கப்பட்டுள்ளது. தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதன் பேரில் மூன்று காலாண்டுகளுக்கான கேளிக்கை வரி கீழ்க்கண்டவாறு செலுத்தப்பட்டுள்ளது.

| வ. எண். | வரி விதிக்கப்பட்டவரின் பெயர் | வருடம் | தொகை ரூ. | வசூல் செய்த நாள் |
|---|---|---|---|---|
| 1 | உரிமையாளர் மகாராணி அம்யூஸ்மெண்ட் பார்க் | 2021–2022 (அக்டோபர் முதல் டிசம்பர் காலாண்டு வரை) | 96548 | சலான் எண். 284 நாள் 27.08.2024 |
| 2 | உரிமையாளர் மகாராணி அம்யூஸ்மெண்ட் பார்க் | 2022–2023 (ஜனவரி முதல் மார்ச் காலாண்டு வரை) | 103524 | சலான் எண். 285 நாள் 27.08.2024 |
| 3 | உரிமையாளர் மகாராணி அம்யூஸ்மெண்ட் பார்க் | 2022–2023 (ஏப்ரல் முதல் ஜூன் காலாண்டு வரை) | 1732781 | சலான் எண். 286 நாள் 27.08.2024 |

8) மனுதாரரின் புகார் மனு மற்றும் பரவை சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. R. மயில்சாமி என்பவர் தனது 09.10.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில், மதுரை மாவட்டம், பரவை சிறப்பு நிலை பேரூராட்சிக்குட்பட்ட அதிசயம் தீம்பார்க் என்கிற பொழுதுபோக்கு பூங்காவில் பெரியவர்களுக்கு ரூ. 700/– மற்றும் சிறுவர்களுக்கு ரூ.500/– என நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் இந்நிறுவனமானது பரவை சிறப்பு நிலை பேரூராட்சிக்கு எவ்வித கேளிக்கை வரியும் செலுத்தவில்லை எனவும், இத்தீம் பார்க்கை முழு தள ஆய்வு மேற்கொள்ளாமல் குறைந்த மதிப்பீட்டு தொகையில் சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது எனவும், அதுவும் கடந்த 7 ஆண்டுகளாக சொத்து வரி, தொழில் மற்றும் தொழிலாளர் வரி ஆகியவை இந்நிறுவனத்தால் செலுத்தப்படவில்லை எனவும், தீம் பார்க்கில் அசுத்தமான நிலையில் குளியல் தொட்டி அமைந்துள்ளது எனவும், பேரூராட்சி அனுமதிக்கு மாறாக இந்நிறுவனத்தால் கூடுதல் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன எனவும் புகாராக தெரிவித்து, இதற்கு காரணமான சம்பந்தப்பட்ட பேரூராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

மனுதாரரின் புகார் மனுவினை உரிய ஆவணங்களின் மூலம் பரிசீலிக்கப்பட்டதில், கீழ்க்காணும் விவரங்கள் தெரிய வருகிறது.

(A) <u>கேளிக்கை வரி :-</u>

மகாராணி அம்யூஸ்மெண்ட் பார்க்காக இருந்த காலத்தில் கேளிக்கை வரியானது மதுரை மாவட்ட வணிகவரித்துறை அலுவலகம் மூலம் பேரூராட்சி கணக்கிற்கு ஈடு செய்து, வரவு வைக்கப்பட்டது. மேலும் 2021 அக்டோபர் முதல் 2022 மார்ச் வரை ரூ. 2,00,072/– மற்றும் 2022 ஏப்ரல் முதல் 2023 ஜுன் வரையில் ரூ.17,32,781/– தொகை கேளிக்கை வரியாக வசூலிக்கப்பட்டுள்ளது ஆவணத்தின் மூலம் அறிய வருகிறது. மீதமுள்ள காலாண்டுகளுக்கு உரிய தொகையினை வசூலிக்க பேரூராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும் செயல் அலுவலரின் அறிக்கையின் வாயிலாக தெரியவருகிறது.

(B) <u>சொத்து வரி :-</u>

பரவை சிறப்பு நிலை பேரூராட்சியினரால் தீம்பார்க் நிறுவனத்திடமிருந்து சொத்துவரி வசூலிக்கப்பட்ட விவரம் :-

| ஆண்டு | | வசூலித்த தொகை (ரூ.) |
|---|---|---|
| 2016–17 | – | 3,25,120 |
| 2017–18 | – | 3,25,120 |
| 2018–19 | –‘ | 6,50,240 |
| 2019–20 | – | 3,25,120 |
| 2020–21 | – | 3,25,120 |
| 2021–22 | – | 3,25,120 |
| 2022–23 | – | 6,43,738 |
| 2023–24 | – | 6,43,738 |
| 2024–25 | – | 6,43,738 |

எனவே, மனுதாரர் புகாராக தெரிவிப்பது போல் எவ்வித சொத்து வரியும் 7 ஆண்டுகளாக வசூலிக்கப்படவில்லை என்பதற்கு மாறாக ஆண்டு தோறும் பேரூராட்சியால் சொத்து வரி வசூலிக்கப்பட்டுள்ளதை ஆவணம் மூலம் அறிய முடிகிறது.

(C) <u>தொழில் வரி :-</u>

மனுதாரர் தனது புகார் மனுவில் கடந்த 7 ஆண்டுகளாக தொழில் வரியானது தீம்பார்க் நிறுவனத்திடமிருந்து பேரூராட்சியால் வசூலிக்கப்படவில்லை என்கிற புகாருக்கு, பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ள அறிக்கையின் மூலம் தொழில் வரி ஆண்டுதோறும் வசூலிக்கப்பட்ட விவரம் பின்வருமாறு தெரியவருகிறது.

| வருடம் | | வசூலித்தத் தொகை (ரூ.) |
|---|---|---|
| 2016-2017 | – | 3,920 |
| 2017-2018 | – | 3,920 |
| 2018-2019 | – | 4,500 |
| 2019-2020 | – | 4,500 |
| 2020-2021 | – | 8,000 |
| 2021-2022 | – | 8,000 |
| 2022-2023 | – | 8,000 |
| 2023-2024 | – | 8,000 |
| 2024-2025 | – | 8,000 |

(D) <u>குளியல் தொட்டி :-</u>

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் குளியல் தொட்டிகளை பேரூராட்சியினரால் நேரடி தள ஆய்வு செய்யப்பட்டது என்றும், எவ்வித புகாருக்கும் இடம் அளிக்காத வகையில் அதிசயம் தீம் பார்க் நிறுவனத்தால் சுத்தமாக பராமரிக்கப்பட்டு வருவதை பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்கு மூலத்தின் மூலம் உறுதி அளித்துள்ளார்.

மேற்காணும் சூழ்நிலையில் பரவை சிறப்பு நிலை பேரூராட்சியின் நிதி ஆதாரமான வருவாய் வரி இனங்கள் அதிசயம் தீம் பார்க் நிறுவனத்திடமிருந்து ஆண்டுதோறும் பரவை பேரூராட்சியில் வசூலிக்கப்பட்டு வரும் நிலையில் மனுதாரர் புகாராக தெரிவிப்பது போல் பேரூராட்சிக்கு எவ்வித நிதியிழப்பு ஏற்பட வாய்ப்பின்றி உள்ள நிலையில், பரவை சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ள அறிக்கையினை ஏற்று, இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறை மன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு, செப்டம்பர் 25 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. R. மயில்சாமி,
   பிளாட் 5, அய்யப்பன் தெரு,
   செம்பருத்தி நகர், புது விளாங்குடி,
   மதுரை – 18
2. செயல் அலுவலர்,
   பரவை சிறப்புநிலை பேரூராட்சி,
   மதுரை மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம். ஆர்.சி நகர், சென்னை – 28
4. இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer )
   (பெயரிடப்பட்ட உரையில்)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை – 28

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

26/9/24

சட்ட ஆலோசகர் / செயலாளர் (முகூபொ)

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032